# ஜனாதிபதி தெரிவு முறையில் மாற்றம் அரசின் இயலாத்தன்மையையே காட்டுகிறது - சுதந்திரக்கட்சி சாடல்

நல்லூர் ... நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் ஐயப்பாடு அரசுக்கு எழுந்துள்ள காரணத்தால்தான் ஜனாதிபதித் தெரிவு முறையை மாற்றி அமைக்க அரசு முனைகிறதாகத் தெரிகிறது

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நேற்று வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவையாவது:

ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறுவதற்கு சில மாதங்களே இருக்கும். ஒரு தருவாயில்

[4-ம் பக்கம் பார்க்க]

ஒரு ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 30 இதழ் 2
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-2-1994

## ஈழ. பல்கலைக்கழகத்தின் விவசாய, விஞ்ஞான பீடங்கள் மூடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கை பல்கலைக் கழக விஞ்ஞான பீடமும், விவசாய பீடமும் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது

கடந்த 3-ம் திகதி மாலை யுடன் இவ்விரு பீடங்களும் மூடப்பட்டது. விடுதியிலிருந்த மாணவர்களும் நிர்வாகத்தினால் வெளியேற்றப் பட்டுள்ளனர்

(4ம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தம், பொருளாதாரதடை நீக்கத்துடன் அமைதி சூழ்நிலைக்கு பின்னரே அரசுடன் பேச்சு ஆரம்பமாகும்!

## அன்ரன்பாலசிங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்பு அரசு, யுத்தநிறுத்தத்தையும், பொருளாதாரத் தடைநீக்கத்தையும் அமுல்படுத்தி தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்" என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.



### நிபந்தனை விதிக்கவில்லை

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் கூறியதாவது;

சமாதானப் பேச்சுக்களுக்கு ஒரு சமாதான சூழ்நிலை முக்கியம் சமாதான சூழ்நிலைக்கு போர் நிறுத்தம் பொருளாதார தடை நீக்கம் என்பன அவசியமானவையாகும். இவை இரண்டையும் செய்து ஒரு சகஜ சுமுக நிலையினை தோற்றுவித்தால் மட்டுமே தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்கு இணங்குவர். பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனைகள் விதிக்கவில்லை. போர் நிறுத்தம் பொருளாதாரத் தடை நீக்கம் என்பன வற்றை சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கான முன் நிபந்தனைகளாக கருதக் கூடாது. இவை சமாதானப் பேச்சுக்களுக்கு அவசியமானவை. யுத்தம் தொடர்ந்து நடைபெறும்போது.

### போர்நிறுத்தம் அவசியம்

மக்கள் சாவையும் அழிவினையும் சதா சந்தித்துகொண்டிருக்கும்போது பேச்சுக்கள் நடத்துவது நடைமுறைச் சாத்தியமல்ல இதனால் அரசு செய்ய வேண்டிய முதல் நடவடிக்கை போர் நிறுத்தம். இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயார். அடுத்த கட்டமாக மக்கள்மீது திணிக்கப்பட்ட பொருளாதார தடையினை நீக்கி சகஜ நிலையினை தோற்றுவிக்க வேண்டும். ஏனெனில் இராணுவ பொருளாதார ரீதியான அழுத்தங்களுக்கு மத்தியில்

(4ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகைகள் மீது கலைஞர் பாய்ச்சல்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக உண்டாக்கும் விதத்தில் சில பத்திரிகைகள் திரித்து செய்தி வெளியிட்டிருப்பதாக தி. மு. க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெயின் கமிஷன் முன்பாக சாட்சியமளித்தபோது தான்

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழினத்திற்கு கருணாநிதி செய்த துரோகம்

(சென்னை)

ஜெயின் கமிஷனிடம் விடுதலைப்புலிகள் பற்றி தான் கூறிய விடயங்கள் வெளியாகி விட்டது என்ற சங்கடத்தில் கருணாநிதி பூமிக்கும் வானத்திற்குமிடையில் குதிக்கிறார். அவர் தமிழினத்திற்கு செய்த துரோகம் ஜெயின் கமிஷனில் விடுதலைப்புலிகள் பற்றி கூறியதாகும் என்று வை. கோபாலசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெயின் கமிஷனில் தான்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளும் அரசும் மட்டுமே பேச்சு நடத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்கள் சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் மட்டுமே நடைபெறவேண்டும். ஆரம்ப பேச்சுக்கள் யாழ்ப்பாணத்திலே நடைபெறவேண்டும் என்று கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம் வந்த மூன்று கிறிஸ்தவ நல்லெண்ணத் தூதுக்குழுவிடம் தமிழீழ விடுதலைப்புலிகள் இவற்றை தெளிவாக்கியுள்ளனர். இதனையே இவர்கள் சிறிலங்கா அரசுக்கு எடுத்துச் செய்யவேண்டும் என்றும் அவர் கூறினார்.

நல்லெண்ணத் தூதுக் குழுவினர் எவரும்

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## சமாதான முயற்சிகளுக்கு படையினரும் ஆதரவாம்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையில் விரைவில் சமாதானம் ஏற்படுவதையே நாம் பெரும்பாலும் விரும்புகின்றோம்', என்று பல இராணுவ அதிகாரிகளும். இராணுவச் சிப்பாய்களும் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தல் வன்முறை ஏற்படலாம்

(கொழும்பு)

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும் சமயத்தில் வன்முறைகள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இப்பகுதியில் சுதந்திரமான

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்து மதகுருமார் குழு விரைவில் தென்பகுதி விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நடைபெற்று வரும் யுத்தத்தினாலும் பொருளாதாரத்தடையினாலும் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் சொல்லொண்ணாத் துன்பங்களை தென்னிலங்கை சிங்கள மக்களுக்கும் புலப்படுத்த மத

(4-ம் பக்கம் பார்க்க)

